R 5177 (page 42)

# கானானில் நுழைந்தபோது ஆபிரகாமின் வயது

## THE COST OF DISCIPLESHIP

வேதாகம பாடங்கள், தொகுதி IIஇல் கொடுக்கப்பட்டுள்ள காலக்கணக்கில், ஆபிரகாம் கானானுக்குள் நுழைந்தபோது அவரது வயது முதலானவைகளில் தவறு காணப்படுவதாக அநேக கடிதங்களை நாங்கள் பெறுகிறோம். இவர்களுக்காகவும் இதே சங்கடத்தில் இருக்கும் மற்றவர்களுக்காகவும் தொகுதி IIஇல் பக்கம் 44-47இல் (தமிழில் பக்கம் 35-38) கொடுக்கப்பட்டுள்ளவைகளை இங்கே விரிவாக பார்க்கிறோம்.

தேராகு மரிக்கும் போது அவருக்கு வயது இருநூற்றைந்து என்று ஆதியாகமம் 11:32 கூறுகிறது. அவர் மரித்தபின்பு ஆபிரகாம் கானானுக்கு சென்றதாக அப்போஸ்தலர் 7:4 கூறுகிறது. ஆபிரகாம் ஆரானை விட்டு புறப்பட்டபோது எழுபத்தைந்து வயது உள்ளவனாயிருந்தான் என்று ஆதியாகமம் 12:4 கூறுகிறது. அப்படியானால் ஆபிரகாம் பிறக்கும் போது தேராகுவின் வயது நூற்று முப்பதாக இருந்திருக்க வேண்டும்.

ஆனால் இது, ‘‘தேராகு எழுபது வயதானபோது, ஆபிரகாம், நாகோர், ஆரான் என்பவர்களைப் பெற்றான்’’ என்று ஆதியாகமம் 11:26 கூறுவதற்கு இசைவாக இல்லையா? இல்லை என்று நாங்கள் பதிலளிக்கிறோம். இங்கே குழப்பம் என்னவென்றால், மூத்தவனாகிய ஆரான் கடைசியாகவும் இளையவனாகிய ஆபிரகாம் முதலாவதாகவும் குறிப்பிடப்பட்டிருப்பதேயாகும். இந்த வருணையில் ஆபிரகாம் முக்கியத்துவம் வாய்ந்தவராக இருந்ததே இதற்கு காரணம். ஏற்ற காலத்தில் கர்த்தரால் வழிநடத்தப்படுவதற்கு இது ஒரு சிறிய தடுக்கலின் கல்லாக இருக்கலாம்.

தேராகுவின் பிள்ளைகளில் ஆரான் என்பவர் மூத்தவன் என்பது பதிவு செய்யப்பட்ட உண்மைகளில் மிகவும் தெளிவாக இருக்கிறது. ஆரானின் மகனாகிய லோத், சித்தப்பாவாகிய ஆபிரகாமுக்கு தோழனாக இருப்பதற்கு ஏற்ற வயதுடைய வனாயிருந்தான். லோத்தும் ஆபிரகாமும் ஒருவேளை ஒரே வயதுடையவர்களாக இருக்கலாம். இருவருக்கும் ஆடுகளும் மாடுகளும் மேய்ப்பர்களும் இருந்தனர். சோதோம் அழிக்கப்பட்ட போது லோத்துக்கு இரண்டு குமாரத்திகள் திருமண வயதில் இருந்தனர். மற்றவர்கள் முன்னரே திருமணமாகியிருந்தனர். இது ஈசாக்கு பிறப்பதற்கு முன்பு ஆகும். அப்பொழுது ஆபிரகாம் தொண்ணூற்று ஒன்பது வயதுடையவராயிருந்தார். (ஆதியாகமம் 17:24; 18:1, 16; 19:8, 14)

இன்னும், தேராகுவின் மகன்களில் ஆரான் மிகவும் மூத்தவனாக இருந்தான், நாகோர் இரண்டாவதாக இருந்தான். இப்படியாக, நாகோர் தனது சகோதரன் ஆரானின் குமாரத்திகளில் ஒருத்தியாகிய மில்க்காளை திருமணம் செய்திருந்தான். (ஆதியாகமம் 24:15) இவனது பேத்தி ரெபேக்காள், ஆபிரகாமின் மகன் ஈசாக்குக்கு மனைவியானாள். (ஆதியாகமம் 24:67)

ஆகையால், இரண்டாம் தொகுதியில் நாம் கொடுத்துள்ள காலக்கணக்கு அறியப்பட்ட எல்லா உண்மைகள் மூலமும் வேத வசனங்களின் சரியான கூற்றின் மூலமும் உறுதி செய்யப்படுகிறது.

---